# தன்முனைப்புடன் செயல்படுவோம்

இப்புவியில் பிறந்த மனிதன் ஒவ்வொருவனிடமும் அவனுக்கே தெரியாமல் திறமைகள் அவனுள்ளே மறைந்து கிடக்கின்றன. இத்திறன்களை வெளிப்படுத்தத் தெரிந்த அனைவரும் வாழ்வில் வெற்றி அடைகிறார்கள். ஒரு சிலர் மிகவும் அடக்கமானவர்கள். தனக்குள் திறன்கள் அடங்கிக் கிடக்கின்றன என்பதையே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இப்படிப்பட்ட மக்களுக்கு தேவையானதே தன்முனைப்பு என்னும் பண்பு.

ஒரு சிலர் இப்பண்பைத் தானாகவே உணர்ந்து வாழ்வில் படிப்படியாக முன்னேறி வெற்றி பெறுவர். மற்றொரு சிலருக்கு இப்பண்பை ஊக்குவிக்கச் சிலர் தூண்டுகோலாக இருக்க வேண்டும். இவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோர், ஆசிரியர், நண்பர் போன்றவர்கள் உதவி புரிவர். தன்முனைப்புப் பேச்சுகள் நடத்தப்படுவதும் அவற்றில் ஒன்று. மேலும், பல தன்முனைப்புப் பயிற்சிகளும், முகாம்களும் நடத்தப்படுகின்றன. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மாணவர்களுக்கு மிகவும் உதவியாய் உள்ளன. இந்நடவடிக்கைகளின் மூலம் மாணாக்கர்கள் தங்களின் வாழ்வில் வெற்றி பெற முடிகிறது.

இன்று சிங்கப்பூரில் தன்முனைப்பு இல்லாத மாணவர்களின் எண்ணிக்கையில் தமிழ் மாணவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது, வீட்டில் பெற்றோர்கள் இருவரும் தங்களின் வேலைகளிலேயே அதிக ஈடுபாட்டோடு இருப்பதால் அவர்களின் பிள்ளைகள் வழி தவறிச் செல்கின்றனர். எனவே, பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு உதவி செய்து அவர்களுக்குத் தூண்டுகோலாக இருந்தால், அவர்கள் வாழ்வில் முன்னேறுவர் என்பது வெள்ளிடைமலை. தங்களுடைய பிள்ளைகள் நன்றாகப் படித்து வாழ்வில் உயர வேண்டும் என எண்ணும் பெற்றோர்கள் வேலைக்குச் சென்று பணத்தை அவர்களுக்கு அளவின்றிக் கொடுப்பதை நிறுத்திவிட்டு, பிள்ளைகளுக்கு ஊக்கம் ஊட்ட வேண்டும். இது மாணவர்களின் தன்முனைப்பை வளர்க்க உதவும். இரண்டாவதாக, தமிழ் மாணவர்களிடம் தன்முனைப்பு என்பது சிறு துளிகூட இல்லாததால் அவர்கள் நம்பிக்கையிழந்து தங்களின் பாடங்களில் பின் தங்குகின்றனர். இளைஞர்கள் அனைவரும் தன்முனைப்போடு சிந்தித்து, நடந்து கொண்டால், அவர்கள் நிச்சயம் தங்களின் வாழ்க்கையில் வெற்றி பெறுவர். இவ்வுலகில் முடியாதது ஒன்றுமில்லை என்பதையும் உணர்வர்.

**“முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்”**

என்பது வான்புகழ் திருவள்ளுவரின் அருள்வாக்கு. இப்பேரறிஞரின் சொற்படி நாம் அனைவரும் தன்முனைப்போடு இருந்தால் வாழ்வில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்று வெற்றியடைவது உறுதி.

ஒவ்வொருவரும் குடத்துள் இட்ட விளக்காக இல்லாமல், தன்முனைப்போடு குன்றின் மேலிட்ட விளக்காக இருந்தால் நிச்சயம் தங்களின் வாழ்க்கையில் வெற்றி பெறுவர்.

**உஷா குமார்**
**உயர்நிலை 4 உயர்தமிழ்**